2–வது கட்டமாக உருவாகும்

# மாதவரம்–சிறுசேரி மெட்ரோ ரெயிலில் 19 லட்சம் பேர் பயணிக்கலாம்

## 138 ரெயில்கள் இயக்கப்படும்

சென்னை, மே. 26– மாதவரம்–சிறுசேரி 2–வது கட்ட மெட்ரோ ரெயில் வழித்தட பாதையில் 138 ரெயில்கள் இயக்கப்பட உள்ளது. இதில் தினமும் 19 லட்சம் பேர் பயணம் செய்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

### மெட்ரோ ரெயில்

சென்னை மாநகர போக்கு வரத்து நெருக்கடியை குறைப் பதற்காக மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது. கோயம்பேடு – ஆலந்தூர், சின்னமலை – விமான நிலையம் வரை உயர்மட்ட பாதையிலும், திருமங்கலம் – சென்ட்ரல், சைதாப்பேட்டை – வண்ணாரப்பேட்டை வரை சுரங்கப்பாதையிலும் முதல் கட்டமாக மெட்ரோ ரெயில் சேவை நடந்து வருகிறது.

பயணிகள், பொது மக்கள் வரவேற்பை தொடர்ந்து 2–வது கட்டமாக மாதவரம் – சிறுசேரிக்கு மெட்ரோ ரெயில் வழித்தடம் உருவாக் கப்படுகிறது. 2025–ம் ஆண்டுக்குள் இப்பணிகள் முடிக்கப்பட்டு மெட்ரோ ரெயில் பயணிகள் சேவை தொடங்கப்படுகிறது.

### 19 லட்சம் பேர்

மாதவரம் – சிறுசேரி மெட்ரோ ரெயில் வழித்தட பாதையில் 4–10 நிமிட இடைவெளியில் தினமும் 138 ரெயில்கள் இயக்கப்பட உள்ளது. இதில் தினமும் 19 லட்சம் பேர் பயணம் செய்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

2–வது கட்ட வழித்தடத் தில் மாதவரம் – கோயம் பேடு, கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி வரையில் மெட்ரோ ரெயில் சேவை நீட்டிக்கப்படுகிறது. இப்பணி கள் வருகிற ஜூன் மாதம் முதல் தொடங்குகிறது.

மெட்ரோ ரெயில் திட்டப் பணிகளை 2025–க்குள் நிறைவு செய்து பயணிகள் போக்குவரத்து சேவை தொடங்க அதிகாரிகள் திட்டமிட்டு உள்ளனர்.

2–வது கட்ட மெட்ரோ ரெயில் வழித்தட பாதையில் 2035–ம் ஆண்டில் பய ணம் செய்வோர் எண் ணிக்கை 32 லட்சமாக அதிகரிக் கும் எனவும் எதிர்பார்க் கப்படுகிறது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

### 2025–ல் பயணிகள் சேவை

மாதவரம் – சிறுசேரி 2–வது கட்ட மெட்ரோ ரெயில் திட்டப்பணிகள் அடுத்த மாதம் (ஜூன்) தொடங்கப்படுகிறது. 2025–ம் ஆண்டில் பணிகள் முடிக்கப்பட்டு பயணிகள் சேவை தொடங்கப்படும். இதில்138 மெட்ரோ ரெயில் கள் இயக்கப்படுகிறது.

தினமும் 19 லட்சம் பேர் பயணம் செய்வார்கள். முதல் கட்ட மெட்ரோ ரெயில் 45 கிலோ மீட்டர் வழித்தட பாதையில் தினமும் 7.76 லட்சம் பேர் பயணம் செய் வார்கள்.

2–வது கட்ட மெட்ரோ வழித்தடப்பாதை வட சென்னை – தென் சென் னையை இணைக்கும் விதமாக அமைக்கப்படுகிறது. இத னால் பயணிகளிடையே மெட்ரோ ரெயிலில் பயணம் செய்யும் ஆர்வம் மேலும் அதிகரிக்கும். பொது மக்கள், ஐ.டி. ஊழியர்கள், தனியார் ஊழியர்கள் மெட்ரோ ரெயில் பயணத்தை பெரிதும் விரும்புவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.